**SEC 2 O-LEVEL EXAM REVISION WORKSHEETS (PAPER 2) - LEVEL 1**
**உயர்நிலை 2 சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 1**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1 | தேர்வுத்தாள் 1 | 1 - 9 |
| 2 | தேர்வுத்தாள் 2 | 10 - 18 |
| 3 | தேர்வுத்தாள் 3 | 19 - 27 |
| 4 | தேர்வுத்தாள் 4 | 28 - 36 |
| 5 | தேர்வுத்தாள் 5 | 37 - 45 |
| 6 | தேர்வுத்தாள் 6 | 46 - 54 |
| 7 | தேர்வுத்தாள் 7 | 55 - 63 |
| 8 | தேர்வுத்தாள் 8 | 64 - 72 |
| 9 | தேர்வுத்தாள் 9 | 73 - 81 |
| 10 | தேர்வுத்தாள் 10 | 82 - 90 |
| 11 | தேர்வுத்தாள் 11 | 91 - 99 |
| 12 | தேர்வுத்தாள் 12 | 100 - 108 |
| 13 | அருஞ்சொற்கள் (தேர்வுத்தாள் 1 to 12) | 109 - 117 |
| 14 | விடைத்தாள்கள் | 118 - 134 |


WORDSMITH BEYOND LEARNING

# தேர்வுத்தாள் 1

| / 70 |
|---|

**‘அ’ பிரிவு**

**A1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள், செய்யுள்கள் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

Q1 தேசிய அளவில் நடைபெற்ற கவிதை ஒப்புவிக்கும் போட்டி மற்றும் சிறுகதை எழுதும் போட்டியில் கபிலன் முதல் பரிசை வென்றதால், அவனின் அப்பா **<u>பெருமிதத்தில்</u>** ______________________________ போனார்.

Q2 சமூக வலைத்தளங்களில் பிரமுகரைப் பற்றி ______________________________ கூறி வந்த ஆடவரைக் காவல் துறையினர் உடனடியாகக் கைது செய்ததை மக்கள் பாராட்டினர்.

Q3 ‘______________________________ வெள்ளம் கொண்டு போகாது’ என்பதுபோல நமக்குத் தெரிந்த தகவல்களைப் பிறரோடு <u>பகிர்வதால்</u> நமக்கு இழப்பு ஏற்படாது என்றார் ஆசிரியர்.

Q4 குமரன் கல்வி கேள்வியில் சிறந்த புள்ளிகளைப் பெற்றிருந்தாலும், அவனின் திறமைகளை ______________________________ பொறுப்புகளை வழங்க வேண்டும் என்று கர்ணன் கூறினார்.

Q5 வான்நின்று உலகம் வழங்கி வருதலால்

______________________ பாற்று

| | |
|---|---|
| 1. இனிக்க பேசி | 6. அமிழ்தம்தான் என்றுணரற் |
| 2. தாயையும் தண்ணீரையும் | 7. அழுத்தம் திருத்தம் |
| 3. தான்அமிழ்தம் என்றுணரற் | 8. ஆழம் பார்த்து |
| 4. இல்லாததும் பொல்லாததும் | 9. கிணற்றுத் தண்ணீரை |
| 5. உச்சி குளிர்ந்து | 10. ஒருகை பார்த்து |

**A2 முன்னுணர்வுக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள் பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப்பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

மன அமைதிக்காக தன்னுடைய வாழ்க்கையைத் துறந்தவர் தான் புத்தர். புத்தர் தற்போது இந்தியாவின் அண்டை நாடாக Q6. ____________________ நேபாளத்தில் “லும்பினி” எனும் நகரில் அரசர் குலத்தில் பிறந்தவர். இவரின் Q7. ____________________ பெயர் சித்தார்த்தர். இவர் அரசராக இருந்ததால் வெளியுலகத்தைக் காணாமல் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தார். தனது 29ஆம் வயதில் ஊர் மக்களைக் காண வேண்டும் என்ற ஆசையில் தன்னுடைய ஊரைச் சுற்றிப்பார்க்கச் சென்றார். ஓர் அரசராகச் சாமானிய மக்களின் வாழ்க்கை முறைகள், முதியவர்களின் கூன் வளைந்த உடல், நோயால் பாதிக்கப்பட்டவரின் Q8. ____________________ போன்றவற்றைப் பார்த்ததும் மனமுடைந்து போனார். நம்முடைய வாழ்க்கையும் இதுபோன்று ஒரு நாள் ஆகும் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றியது. இதனால் நிம்மதியைத் தேடி <u>துறவறம்</u> மேற்கொண்டார். மனநிம்மதிக்காகக் <u>**கடுந்தவம்**</u> புரிந்தார். ஆனால், கடுந்தவத்தில் அவருக்கு எந்த ஒரு <u>**விடயமும்**</u> கிடைக்கவில்லை. பிறகு, புத்தர் போதிமரத்தடியில் Q9. ____________________ தியானம் செய்ய ஆரம்பித்தார். 12 வருடம் கழித்து அவரின் தியானத்தால் மனநிம்மதி அடைந்து <u>ஞானம்</u> பெற்றார். இவரின் தியான <u>மகிமை</u>யையும் அதில் பெற்ற மன அமைதியையும் Q10. ____________________ எடுத்துரைத்தார். ‘ஆசையே துன்பத்திற்குக் காரணம்’ எனும் அவரின் பொன்மொழியை அனைவருக்கும் புரியவைத்தார். அதன் பிறகு, இவரின் பால் ஈர்க்கப்பட்டவர்களே புத்த மதத்தில் <u>சரணடைந்தார்</u>கள்.

| | |
|---|---|
| 1. வலிகள் | 6. உன்னதமான |
| 2. எண்ணங்கள் | 7. இவருக்கு |
| 3. உண்மையான | 8. சென்று |
| 4. உலகுக்கு | 9. பிறரை |
| 5. அமர்ந்து | 10. உள்ள |

**A3 பிழை திருத்தம் (10 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் பகுதியின் இடப்பக்கத்தில் ஐந்து வினாக்களின் எண்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் எதிரிலுள்ள வரியில் கோடிடப்பட்டுள்ள சொல் பிழையாக உள்ளது. அந்தப் பிழையான சொற்களைத் திருத்தி அச்சொற்களின் சரியான வடிவத்தை எழுதவும்.**

| | |
|---|---|
| | இதழ்களில் இடம்பெறும் செய்திகளுக்கெல்லாம் தலையானதும் இதழ் நடத்துபவரின் |
| | எழுத்தாகவும் அமைவது தலையங்கம் ஆகும். தலையங்கம் ‘ஆசிரியர் பகுதி’ என்ற |
| Q11 | பெயரிலும் வருவதுண்டு. நாட்டு நிலவரகளைப் பற்றிய மக்களின் கருத்துகளை |
| | வெளியிடுவதே தலையங்கத்தின் நோக்கமாகும். மக்கள் கருத்தாயினும், துறை |
| | வல்லுநரின் கருத்தாயினும் விருப்பு வெறுப்பு இன்றி நடுவுநிலைமையோடு |
| | தலையங்கம் அமைதல் வேண்டும். ஆசிரியர் தனது கருத்துகளைத் திணிப்பது |
| Q12 | இதழின் வளர்ச்சியின் தடையாக அமையலாம். மக்களின் கருத்துகள் எத்தகையது |
| | என்பதைக் கூறுவதோடல்லாமல், நன்கு ஆராய்ந்து மக்களுக்கு நன்மை தரக்கூடிய |
| Q13 | கருத்தினை உருவாக்குவதை தலையங்கமே ஆகும். உள்நாட்டு, வெளிநாட்டுச் |
| | செய்திகள், வரவு செலவுத் திட்டங்கள், பொருளாதாரக் கொள்கைகள், தேர்தல், |
| Q14 | அரசியல், சட்ட விவரங்கள் போன்ற வடிவங்களாக தலையங்கம் அமையாது. |
| Q15 | இதுயாவும், மக்களைக் குழப்பாமல் விமர்சனங்களின் வாயிலாக உண்மைகளை |
| | வெளிச்சத்துக்குக் கொண்டு வரும் பொறுப்புகளைக் கொண்டுள்ளன. |

Q11 ____________________________

Q12 ____________________________

Q13 ____________________________

Q14 ____________________________

Q15 ____________________________

## ‘ஆ’ பிரிவு

### B4 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக. வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை எழுதுக.**

**பகுதி 1**



ஒரு மனிதனுடைய வெற்றிக்கும் தோல்விக்கும் பெரும்பாலான நேரங்களில் நண்பர்களே முக்கியக் காரணமாய் இருக்கிறார்கள். அதனால்தான் நமக்கு அமையும் நண்பர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. நல்ல நண்பர்கள் எப்படி நம்மை உயரப் பறக்கவிடுவார்களோ, அதேப்போல தீய நண்பர்கள் நம்மை உயரத்தில் இருந்து பள்ளத்திற்குத் தள்ளி விடுவார்கள். சரியான பாதையில் கப்பலைச் செலுத்தும் ஒரு **<u>மாலுமி</u>**யைப் போல இருக்க வேண்டும் நல்ல நண்பன். 'கூடா நட்பு கேடாய் முடியும்' என முன்னோர்கள் அந்தக் காலத்திலேயே அழுத்தமாய்ச் சொன்னதன் காரணம் அதுதான். உண்மை நண்பர்கள் நாம் மகிழ்ந்திருக்கும் தருணங்களில் காணாமல் போய்விட்டாலும், நம்முடைய துயரத்தைப் பகிர்ந்து கொள்ள நிச்சயம் இருப்பார்கள். அப்போது அவர்கள் தங்களின் சொந்த அலுவல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் நாம் பேசுவதைக் கவனமுடனும் ஈடுபாட்டுடனும் கேட்பார்கள். இதுவே நல்ல நண்பர்களின் அடையாளமாகும். சில நண்பர்களோடு பழகும்போது நம்முடைய நல்ல குணங்கள் எல்லாம் மேம்படும். அத்தகைய நண்பர்களை எப்போதுமே அருகில் வைத்திருங்கள். தீய நண்பர்களிடமிருந்து ஒதுங்குங்கள். தீய நண்பனோடு பழகுவதை விட நண்பனே இல்லாமல் வாழ்வது **<u>சாலச் சிறந்தது</u>**.

Q16 நல்ல நண்பர்கள் எத்தகைய குணத்தைப் பெற்றிருப்பார்கள்?

1. நம்மை உயரத்திலிருந்து பள்ளத்திற்குள் தள்ளி விட்டு விடுவார்கள்
2. நம்முடைய துயரத்தில் அவர்களும் பங்கு கொள்வார்கள்
3. அவர்களுடைய வேலைகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பார்கள்
4. நம்முடைய மகிழ்ச்சியில் மட்டுமே பங்கெடுப்பார்கள் ( )

Q17 தீய நண்பர்களிடமிருந்து விலக வேண்டும் என்று ஏன் கட்டுரையாசிரியர் கருதுகின்றார்?

1. நமக்கு நன்மையை கொடுப்பவர்கள் என்பதால்
2. நாம் உயர்வதை அவர்கள் தடுப்பதால்
3. நம்முடைய துன்பங்களில் பங்கு கொள்வதால்
4. நம்மை சரியான வழியில் அழைத்துச் செல்வதால் ( )

**பகுதி 2**



கற்கும் போது கசப்பாகவும், கற்ற பின் கரும்பினைப் போல் இனிப்பாகவும் சுவைப்பது கல்வி. கல்வி என்பது இந்த உலகில் பெரிதாக மதிக்கப்படும் ஒன்று. "கல்வி ஒன்றே இந்த உலகை மாற்றக்கூடிய சக்திவாய்ந்த ஆயுதம்" என்பது நெல்சன் மண்டேலாவின் கருத்தாகும். இன்றைய வாழ்க்கை முறையில் கல்வி என்பது மனிதனின் வாழ்க்கையில் ஓர் அத்தியாவசியத் தேவையாகிவிட்டது. இன்று அனைத்து வேலையிடங்களிலும் கல்வி அறிவுப் பெற்றிருக்கும் ஒருவரைத்தான் முதலாளிகள் பணிக்கு **நியமனம்** செய்கிறார்கள். பணமும் பிற செல்வங்களும் ஒரு மனிதனுக்கு மரியாதையைத் தேடித் தருவதில்லை. ஆனால், கல்வியிடம் அந்த இயல்பு உள்ளது. சமுதாயத்தில் பேரும் புகழும் உள்ளவரிடம் கல்வியின் உயர்வைக் காணலாம். கல்வி ஓர் அற்புதமான **சாதனம்**. கல்வி கற்றால் நாம் பல உயிர்களைக் காப்பாற்றலாம். உயரிய மலைகளைக் காட்டிலும் உயர்ந்த கோபுரங்களைக் கட்டலாம். மின்னல் வேகத்தில் வேலைகளைச் செய்யலாம். புதிய நாட்டைக் கூட அமைக்கலாம். "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு". எனவே, இளைஞர்களாகிய நாம்தான் நாட்டின் முன்னேற்றத்திற்காக **முனைப்புக்** காட்ட வேண்டும். நாம் கல்விக் கற்றால் மட்டுமே நாட்டைச் செழிப்பாக வைத்துக் கொள்ள இயலும். ஆகவே, கல்வியை இனி ஒரு சுமையாக எண்ணாமல், தரமான எதிர்காலம் தரும் ஓர் உந்துசக்தி என்றெண்ணி அதனுடைய நன்மைகளை அனைவரும் இணைந்தே அனுபவிப்போம்.

Q18 கல்வியைப் பற்றி நெல்சன் மண்டேலாவின் கருத்து என்ன?

1. கற்றப்பின் சுவையைத் தருவது கல்வி
2. கல்வி ஒன்றே இந்த உலகை மாற்றக்கூட்டிய சக்திவாய்ந்த ஆயுதம்
3. கல்வி உலகில் பெரிதாக மதிக்கப்படும் ஒன்று
4. கல்வி மனிதனின் வாழ்வில் அத்தியாவசியமான ஒன்று ( )

Q19 கல்வியிடம் எந்த இயல்பு உள்ளது?

1. ஒரு மனிதனுக்கு மரியாதையைத் தேடித் தரும் இயல்பு
2. மற்றவர்கள் மத்தியில் பேரும் புகழும் தேடித் தரும் இயல்பு
3. பல உயிர்களைக் காப்பாற்றும் இயல்பு
4. நாட்டைச் செழிப்பாக வைத்துக் கொள்ளும் இயல்பு ( )

Q20 கீழே கொடுக்கப்பட்டவற்றுள் எது நாம் கல்விக் கற்றால் அனுபவிக்கும் நன்மை அல்ல?

1. கல்வி கற்றால் நாம் பல உயிர்களைக் காப்பாற்றலாம்
2. மின்னல் வேகத்தில் வேலைகளைச் செய்யலாம்
3. கல்விக் கற்றால் நாம் மற்றவர்களை மதிக்கலாம்
4. மலைகளைக் கூட அமைக்கலாம் ( )

**'இ' பிரிவு**

**C5 சுயவிடைக் கருத்தறிதல் (30 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில்** விடை தருக.



1. பறை ஒரு தமிழிசைக் கருவியாகும். இது தோலால் ஆன மேளமாகும். 'பறை' என்ற சொல் பேச்சைக் குறிக்கும். பறை தோலிசைக் கருவிகளின் தாய். தமிழினத்தின் தொன்மையான அடையாளம், உழைக்கும் மக்களின் இசைக் களஞ்சியம். குறிஞ்சிப்பறை, முல்லைப்பறை, மருதப்பறை, நெய்தற்பறை, பாலைப்பறை என ஐந்திணைகளிலும் பறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

2. இக்கருவியில் மூன்று அடிப்படை பாகங்கள் உள்ளன. அவை வட்டச் சட்டம், மாட்டுத் தோல் மற்றும் சட்டத்தின் உட்புறத்தில் பொருத்தப்படும் உலோகத் தட்டு. பறையைத் தயாரிக்க நன்கு முதிர்ந்த எருமை மாட்டுத் தோலே <u>உகந்தது</u>. எருமையைக் கொன்று அதன் எலும்பு, சதைகளை நன்கு நீக்கிய பின் மீதி இருக்கும் காயாத எருமை தோலைக் கொண்டு பறையைச் செய்வர். பறையை வாசிப்பதற்கு அதனைத் தீயில் நன்கு சுடுவது அவசியம். இப்பறையை வாசிக்க இடது கையில் சிம்புக்குச்சியும் வலது கையில் அடிக்குச்சியும் பயன்படுத்த வேண்டும். சிம்புக்குச்சி என்பது மூங்கில் மரத்தினால் செய்யப்படும். அடிக்குச்சி என்பது வேலிகாத்தான் மரம், புளியமரம், மஞ்சள் நெத்திமரம் மூலம் செய்யப்படும்.

3. பறையடித்துத் தகவல் சொல்லுதல் பழங்காலத்தில் முக்கியத் தகவல்களை மக்களுக்குப் பரப்பும் முறையாக அமைந்தது. பழங்காலத் தமிழர்களின் வாழ்க்கைமுறையில் **<u>செய்தியூடகம்</u>** என்று ஒன்று இல்லை. அதனால் அக்காலக்கட்டத்தில், ஒரு நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை, **<u>அறிவித்தல்</u>**களை, அரசக் கட்டளைகளை ஊர் ஊராகச் சென்று பறையடித்துக் கூறினார்கள். அவ்வாறு சொல்லுதலை "பறைதல்" என்றும், அவ்வாறு ஊர் ஊராகச் சென்று சொல்பவரைப் "பறையர்" என்றும் அழைத்தார்கள். பறையர்கள் ஊர் ஊராகச் சென்று செய்திகள், அறிவித்தல்கள், அரச மற்றும் நிர்வாகக் **<u>கட்டளை</u>**கள் போன்றவற்றை, **<u>உரத்த</u>**க் குரலில் சத்தமாகக் கூறி மக்களின் கவனத்தை ஈர்த்து, தான் கொண்டு வந்த செய்தியை அல்லது அறிவித்தலை மக்களுக்குப் பறைவார்கள்.

4. பறை ஆட்டம் என்பது தமிழர்களின் பாரம்பரிய நடனம் ஆகும். பறையாட்டம் உணர்ச்சிமிக்கது மற்றும் எழுச்சி மிகுந்தது. பறையின் அதிர்ந்த ஓசைக்கு ஆடாத கால்களே இல்லை எனலாம். பறையின் ஓசைமிகுந்த சத்தத்தைக் கேட்டாலே உடல் அசைவுகள் தானாக எழும். இன்று பறையாட்டம் கோவில்களிலும் இறப்பு வீடுகளிலும் ஆடப்படுகிறது. முற்காலத்தில் ஆதி மனிதச் சமூகம் தங்கள் கூடுதலுக்காகவும் தங்கள் குழுவுக்கு ஆபத்துகளை உணர்த்தவும் விலங்குகளிடம் இருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ளவும் எழுப்பிக் கொண்ட சத்தம் தான் பறையாட்டத்தின் மூலம் எனக் கருதப்படுகிறது. **ஆவேசம்**, மகிழ்ச்சி, உற்சாகம் என உணர்ச்சிகளை எழுப்பி, கேட்போரை ஒரே நேர்க்கோட்டில் இணைக்கும் சக்தி வாய்ந்தது இது.

5. இத்தனை சிறப்பு மிக்க இசைக்கருவிக்குச் சொந்தக்காரர்கள் தமிழர்கள் என்பதை அறியும்போது நாம் பெருமையடைகிறோம். இக்கருவியை எவ்வாறு வாசிக்க வேண்டும் என்பதற்கான வகுப்புகள் இங்கு பல சமூக மன்றங்களில் நடக்கின்றன. அவற்றில் சேர்ந்து நம் இளைய தலைமுறையினர் பறையை முறைப்படி வாசிக்கக் கற்றுக்கொள்ளலாம். மேலும், நமது பள்ளிகளில் ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பறையடித்தல் போன்ற பாரம்பரியக் கலைகளைப் பற்றி கற்பிக்கிறார்கள். இதன்வழி, பறையடிக்கும் கலையை இன்னும் பல நூற்றாண்டுகளுக்குப் பாதுகாக்க முடியும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**வினாக்கள் (26 மதிப்பெண்கள்)**

Q21 ஐந்திணைகளில் பயன்படுத்தப்பட்ட பறைகள் யாவை? (4 மதிப்பெண்கள்)

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

__________________________________________________________________

WORDSMITH

Q22 பறையின் முக்கிய பகுதிகள் யாவை? (4 மதிப்பெண்கள்)

Q23 பறைகள் எவ்வாறு செய்யப்படுகின்றன? (4 மதிப்பெண்கள்)

Q24 அக்காலத்தில் பறை எதற்காகப் பயன்படுத்தப்பட்டது? (4 மதிப்பெண்கள்)

WORDSMITH
BEYOND LEARNING
EQ SKILLS = JUMP gVADES + achieve Big

Q25 ஆதிகாலப் பறையாட்டமும் இன்றைய பறையாட்டமும் எவ்வாறு வேறுபடுகின்றன? (5 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

Q26 பறையாட்டக் கலையை அழியாமல் எவ்வாறு பாதுகாக்கலாம்? (5 மதிப்பெண்கள்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

**இடம் நோக்கி பொருள் எழுதுக (4 மதிப்பெண்கள்)**

**பின்வரும் சொற்களுக்கு இணையான சொற்கள் வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பத்தியில் இடம் பெற்றுள்ளன. அதனைக் கண்டறிந்து விடைத்தாளில் எழுதுக.**

Q27 பத்தி 2-இல் 'வயதான' என்னும் சொல்லுக்கு இணையாக இடம் பெற்றுள்ள வேறு சொல் எது? (2 மதிப்பெண்கள்)

______________________

Q28 பத்தி 4-இல் 'சேர்க்கும்' என்பதை எந்தச் சொல் உணர்த்துகிறது? (2 மதிப்பெண்கள்)

______________________

# SEC 2 O-LEVEL EXAM REVISION WORKSHEETS (PAPER 2) - LEVEL 1
# உயர்நிலை 2 சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 1

## அருஞ்சொற்பொருள்

| தேர்வுத்தாள் 1 | | | |
|---|---|---|---|
| **எண்** | **அருஞ்சொல்** | **பொருள்** | **English Meaning** |
| 1. | பெருமிதம் (பெருமிதத்தில்) | பெருமை | Proud |
| 2. | பகிர்வு (பகிர்வதால்) | பங்கிடுதல் | Share |
| 3. | துறவறம் | சன்னியாசம் | Ascetic |
| 4. | கடுந்தவம் | ஆழ்ந்த தியானம் | Austerities |
| 5. | விடயம் (விடயமும்) | பதில் | Answer |
| 6. | ஞானம் | அறிவு | Wisdom |
| 7. | மகிமை | மேன்மை | Greatness |
| 8. | சரணடைந்தார் | சேர்ந்தார் | Surrender |
| 9. | மாலுமி | கப்பலோட்டி | Captain |
| 10. | சாலச் சிறந்தது | மிக நன்று | Excellent |
| 11. | நியமனம் | தேர்ந்தெடுத்தல் (பதவி / வேலை) | Appoint |
| 12. | சாதனம் | கருவி | Tool |
| 13. | முனைப்பு | ஆர்வம் | Eager |
| 14. | உகந்தது | ஏற்றது | Suitable |
| 15. | செய்தியூடகம் | - | Media |
| 16. | அறிவித்தல் | தெரிவித்தல் | Announcement |
| 17. | கட்டளை | ஆணை | Command |
| 18. | உரத்த | சத்தமான | Loud |
| 19. | ஆவேசம் | கோபம் | Anger |

**SEC 2 O-LEVEL EXAM REVISION WORKSHEETS (PAPER 2) - LEVEL 1**
**உயர்நிலை 2 சாதாரண நிலை தேர்வுப் பயிற்சித்தாள் (தாள் 2) - நிலை 1**

## விடைத்தாள்

### தேர்வுத்தாள் 1

**A1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள், செய்யுள்கள்**

Q1 உச்சி குளிர்ந்து (5)
Q2 இல்லாததும் பொல்லாததும் (4)
Q3 கிணற்றுத் தண்ணீரை (9)
Q4 ஆழம் பார்த்து (8)
Q5 தான்அமிழ்தம் என்றுணரற் (3)

**A2 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

Q6 உள்ள (10)
Q7 உண்மையான (3)
Q8 வலிகள் (1)
Q9 அமர்ந்து (5)
Q10 உலகுக்கு (4)

**A3 பிழை திருத்தம்**

Q11 நிலவரங்களை
Q12 வளர்ச்சிக்கு
Q13 உருவாக்குவதும்
Q14 அமையும்
Q15 இவையாவும்

**B4 தெரிவுவிடைக் கருத்தறிதல்**

Q16 2
Q17 2
Q18 2
Q19 1
Q20 4

**C5 சுயவிடைக் கருத்தறிதல்**

Q21 குறிஞ்சிப்பறை, முல்லைப்பறை, மருதப்பறை, நெய்தற்பறை, பாலைப்பறை ஆகியவை ஐந்திணைகளில் பயன்படுத்தப்பட்ட பறைகள் ஆகும்.

Q22 பறையின் முக்கிய பகுதிகள் வட்டச் சட்டம், மாட்டுத் தோல், சட்டத்தின் உட்புறத்தில் பொருத்தப்படும் உலோகத் தட்டு ஆகியவை ஆகும்.

Q23 பறைகளைச் செய்ய நன்கு முதிர்ந்த எருமை மாட்டுத் தோலே ஏற்றது. எருமையின் எலும்பு, சதைகளை நன்கு நீக்கிய பின் மிச்சமிருக்கும் காயாத எருமைத் தோலைக்

WORDSMITH BEYOND LEARNING

கொண்டு பறைகள் செய்யப்படுகின்றன. இப்பறையை வாசிக்க இடது கையில் சிம்புக்குச்சியும் வலது கையில் அடிக்குச்சியும் பயன்படுத்த வேண்டும். சிம்புக்குச்சி என்பது மூங்கில் மரத்தினாலும் அடிக்குச்சி என்பது வேலிகாத்தான் மரம், புளியமரம், மஞ்சள் நெத்திமரம் மூலமும் செய்யப்படும்.

Q24 அக்காலத்தில் பறை ஒரு முக்கிய தகவல் பரப்பும் சாதனமாக பயன்படுத்தப்பட்டது. ஒரு நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை, அறிவித்தல்களை, அரசக் கட்டளைகளை ஊர் ஊராகச் சென்று சொல்ல பறை பயன்படுத்தப்பட்டது.

Q25 ஆதி மனித சமூகம் தங்கள் கூடுதலுக்காகவும், தங்கள் குழுவுக்கு ஏற்படவிருக்கும் ஆபத்துகளை உணர்த்தவும், விலங்குகளிடம் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் பறையைப் பயன்படுத்தினார்கள். தங்களுக்குள் தகவல்களைப் பகிர்ந்துக் கொள்ளவும் பறையாட்டம் நடைபெற்றது. இன்று பறையாட்டம் கோயில் திருவிழாக்களிலும் இறப்பு வீடுகளிலும் நடக்கிறது. இவ்வாறு ஆதிகாலப் பறையாட்டமும் இன்றைய பறையாட்டமும் வேறுபடுகின்றன.

Q26 பறையாட்டத்தைத் தற்போது சமூக மன்றங்களில் கற்றுக்கொடுக்கிறார்கள். அதனை நம் இளைய தலைமுறையினர் கற்றுக்கொண்டு அதன் பெருமையைப் பற்றி அறிந்துகொள்ளலாம். மேலும், பள்ளிகளில் ஆசிரியர்கள் பறையடித்தல் போன்ற பாரம்பரியக் கலைகளைப் பற்றி மாணவர்களுக்குக் கற்பிக்கிறார்கள். இதன்வழி, பறையாட்டத்தை அழியாமல் பாதுகாக்கலாம்.

Q27 முதிர்ந்த

Q28 இணைக்கும்

## தேர்வுத்தாள் 2

**A1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள், செய்யுள்கள்**

| | | |
|---|---|---|
| Q1 | தட்டிக்கழித்து | (3) |
| Q2 | அகநக நட்பது | (9) |
| Q3 | ஆற அமர | (1) |
| Q4 | அரசன் இல்லாத | (10) |
| Q5 | பழக்க வழக்கங்கள் | (8) |

**A2 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

| | | |
|---|---|---|
| Q6 | வழங்குவதுண்டு | (1) |
| Q7 | தொன்மை | (9) |
| Q8 | இல்லாவிடினும் | (3) |
| Q9 | உருவாக்கம் | (7) |
| Q10 | நடிக்கும் | (5) |

**A3 பிழை திருத்தம்**

Q11 உடையவர்

Q12 உலகிற்கு

Q13 ஆகவே / எனவே

Q14 செய்பவருக்கு

Q15 கடினமாக